

மதுரை மாவட்டம் மேலூர் நகராட்சியில் கட்டப்பட்டுள்ள கர்னல் பென்னிகுவிக் பேருந்து நிலையம், வார்டு எண் 23, அம்மன் நகரில் கட்டப்பட்டுள்ள அறிவுசார் மையம் மற்றும் நூலகம், சிவன் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள நகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடம் உள்ளிட்ட நலத்திட்ட பணிகளை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் திறந்து வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார், நகராட்சி சேர்மன் முகமது யாசின் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிப்பு!

# உடனடியாக விடுவித்திட தூதரக நடவடிக்கை எடுப்பீர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, ஜன. 14-

ராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்திலிருந்த மீன்பிடிக்கச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக 12.01.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட வலுவான மற்றும் பயனுள்ள தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (12.01.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதை ஆழ்ந்த கவலையுடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நேற்று முன்தினம் (12.01.2025) இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற எட்டு தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர் என்றும் அவர்களது இரண்டு மீன்பிடி விசைப் படகு களையும் பறிமுதல் செய்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் அடிக்கடி சிறைபிடிக்கப்படுவதால், மீனவ சமுதாயத்தினரிடையே அச்சத்தையும், நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர்களது பாரம்பரிய வாழ்வாதார வருவாய் ஆதாரங்கள் பாதிக்கப்படுவதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகள் மூலம் நிரந்தர தீர்வு காண வேண்டியது அவசியம் என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் விரைவில் விடு விப்பதை உறுதி செய்வதற்கு உரிய தூதரக வழிமுறைகள் மூலம் வலுவான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தமிழர் திருநாளாம்

# பொங்கல் திருநாளை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாட ஏற்பாடு!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, ஜன.14-**

**தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை தமிழ்நாடு முழுவதும் பல்வேறு துறைகள் சார்பில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

'பொங்கலோ பொங்கல்" என்று சொல்லும்போதே மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குகிறது. புத்துணர்வு பொங்கி வழிகிறது. உள்ளமெல்லாம் பூரிப்பு பிறக்கிறது. நம் ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்த விழாவாகத் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

பொங்கல் திருநாள் நான்கு நாட்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. பழையன கழிந்து புதியன புகும் நாளாக மார்கழி கடைசி நாளன்று போகி. தமிழர் திருநாளாம் பொங்கல் தை முதல் நாளன்று கொண்டாடப்படுகிறது. வானம் கொடுத்தது; பூமி பெற்றது என்ற அன்பான உறவை நிலத்தின் மீது நின்று வான்நோக்கிக் கரம் குவித்து உதயசூரியனை வணங்கும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. "சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" என்ற அய்யன் வள்ளுவர் குறளிற்கேற்ப, வேளாண் பெருங்குடி மக்களுக்கு நன்றி மற்றும் அவர்களுக்கு உறுதுணையாக விளங்கும் கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் தை இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. நிறைவு நாளில் காணும் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் மக்கள் அனைவரும் தங்கள் உற்றார் உறவினர்களைச் சந்தித்துத் தங்கள் அன்பையும், உணவுப் பண்டங்களையும் பகிர்ந்து மகிழ்வர்.

**தமிழர்களின் பெருமித அடையாளம் - ஜல்லிக்கட்டு:**

தமிழர்களின் பெருமித அடையாளமான ஜல்லிக்கட்டு போட்டி ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளையொட்டி நடத்தப்படுகிறது. ஏறு தழுவல், மஞ்சு விரட்டு அல்லது சல்லிக்கட்டு (ஜல்லிக்கட்டு) எனப் பல்வேறு பெயர்களில் இது குறிப்பிடப்படுகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்பட்டாலும், மதுரை மாவட்டத்தில் நடைபெறும் அவனியாபுரம், அலங்காநல்லூர், பாலமேடு ஆகிய மூன்று இடங்களில் நடத்தப்படும் ஜல்லிக்கட்டு போட்டி உலகப்புகழ் பெற்றது. அதிலும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உலகப்புகழ் பெற்றதாகும்.

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப் பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்துடன் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.1.2024 அன்று திறந்து வைத்தார். இந்த அரங்கம் தமிழ்நாட்டின் பண்பாட்டை வெளிப்படுத்தும் பாரம்பரிய விளையாட்டுகளை பிரபலப் படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் உருவாக்கப்பட்ட நவீன அரங்காக அமைந்துள்ளது.

சுற்றுலாத்துறை மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் விழாக்கோலம்:

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறையின் மூலமாக பொங்கல் சுற்றுலா விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பொங்கல் சுற்றுலா விழாவானது தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயற்கையான சூழலுடன் அமைந்த ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை கிராமத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு பாரம்பரிய முறைப்படி அவர்களுக்கு வரவேற்பு அளித்து, அவர்களுடன் ஒன்றுகூடி புத்தாடை உடுத்தி, புதுப்பானையில் பொங்கலிட்டு மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுகிறது.

**விளையாட்டுப் போட்டிகள்:**

கிராமிய நடனம், சிலம்பாட்டம், பரதநாட்டியம் போன்ற நிகழ்ச்சிகள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் கலைஞர்களுடன் இணைந்து நடனமாடி மகிழ்வார்கள். பாரம்பரிய விளையாட்டுகளான பல்லாங்குழி, தாயம், அச்சாங்கல், கோ - கோ விளையாட்டு, பம்பரம் விடுதல், கோலி விளையாட்டு போன்ற விளையாட்டுகளும், இசை நாற்காலிப் போட்டி, உறி அடித்தல் போட்டி, கயிறு இழுக்கும் போட்டிகள், வழுக்கு மரம் ஏறும் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படுகிறது.

இன்றைய மாறிவரும் நவீன வாழ்க்கைச் சூழலில் மறந்து வரும் நமது பாரம்பரிய நெறிமுறைகளை வளர்ந்து வரும் நம் தமிழ்நாட்டின் அடுத்த தலைமுறையினரும் அறிந்திடும் வகையில் பொங்கல் சுற்றுலா விழா ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

**'சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா':**

பொங்கல் திருநாளை யொட்டி, தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் "சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா" கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டிற்கான 'சென்னை சங்கமம்- நம்ம ஊரு திருவிழா' சென்னை, கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ.ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத் திடலில் 13.1.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படுகிறது. இதில் தமிழ்நாட்டின் புகழ் பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து நடத்தும் மாபெரும் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

மேலும், சென்னையில் 18 இடங்களில் 14.1.2025 முதல் 17.1.2025 வரை நான்கு நாட்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெற உள்ளன. இவ்விழாவில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டுள்ள 1500-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம், துடும்பாட்டம், பம்பையாட்டம், கைச்சிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவை யாட்டம், கோலாட்டம், ஜிக்காட்டம், ஜிம்பளா மேளம், பழங்குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லுபாட்டு, கணியன் கூத்து, தெருக்கூத்து, பாவைக்கூத்து, தோல்பாவைக்கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். அத்துடன் புகழ்பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசைக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், கேரளத்தின் தெய்யம் நடனம், மகாராஷ்டிராவின் லாவணி நடனம், ராஜஸ்தான் கூமர் நடனம், மேற்கு வங்காளம் தனுச்சி நடனம், கோவாவின் விளக்கு நடனம், உத்தராகண்ட்டின் சபேலி நடனம் ஆகிய பிற மாநிலக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. விழா நடைபெறும் இடங்களில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் விரும்பி உண்ணும் பல உணவு வகைகளைக் கொண்ட அரங்குகள் அமைக்கப்பட்டு உணவுத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

சென்னை சங்கமம்- நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியைத் தொடர்ந்து கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் ஆகிய எட்டு நகரங்களிலும் இந்த ஆண்டு சங்கமம் - நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

பொங்கல் பண்டிகையையொட்டி, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கல்லூரிகளில் மாணவ, மாணவியர் பாரம்பரிய உடை அணிந்து பொங்கலிட்டு, ஆட்டம் பாட்டத்துடன் பொங்கல் பண்டிகை யைக் கொண்டாடுகின்றனர்.

தமிழர் திருநாளாம் பொங்கலைப் பொதுமக்கள் உற்சாகமாகவும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடிடும் வகையில், கிராமிய மற்றும் கலை நிகழ்ச்சிகள், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் போன்றவை தமிழ்நாடு அரசால் பல்வேறு துறைகளின் மூலம் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு பொதுமக்கள் மற்றும் கட்சியினருக்கு பொங்கல் வழங்கினார். பொதுமக்கள் மற்றும் தி.மு.க.வினர் ஏராளமானோர் கலந்து கொண்டு அமைச்சருக்கு பொங்கல் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். இதில் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ராஜ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், பொதுக்குழு உறுப்பினர்கள் பட்டுச்செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் வி.கே.ராஜேந்திரன், குன்னம் ஒன்றிய குழு உறுப்பினர் உமா சந்தோஷ்குமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கு.க.அன்பழகன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம்: ஜன.11ந் தேதிக்குள்

# தமிழ்நாடு முழுவதும் 67 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

*சென்னை, ஜன. 14-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு துவக்கி வைக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 11.01.2025 வரை 67 சதவீதம் நிறைவுபெற்றுள்ளது - என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.*



*இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது :-*

*"தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் விழாவாகப் பொங்கல் பண்டிகை தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள் அறுவடைத் திருவிழாவாகவும், இயற்கைக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும் அவர்தமோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. 2025-ஆம் ஆண்டு தைப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்குத் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு வழங்கப்படும்" எனவும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டி-சேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என அறிவித்தார்கள்.*

*அதன்படி, கடந்த 09.01.2025 அன்று சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் சின்னமலை வேளச்சேரி பிரதான சாலையில் இயங்கிவரும் சைதாப்பேட்டை-11 நியாயவிலைக் கடையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரிசிபெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கி திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.*

*இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 34,793 நியாயவிலைக்கடைகளில் 2 கோடியே 20 லட்சத்து 94 ஆயிரத்து 585 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.*

*அதன்படி, 11.01.2025 வரை தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 47 லட்சத்து 07 ஆயிரத்து 584 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 67 சதவீதம் பணிகள் நிறைவுபெற்றுள்ளது. மீதமுள்ள பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.*

*இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்கள்.*

### ப.கோவிந்தராசன் தலைமை! கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம்

# இலுப்பூர், எரவாஞ்சேரியில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்!

### என்.கௌதமன், குடியாத்தம் புவியரசி, ஆரூர் மணிவண்ணன், பா.அருண்குமார் சிறப்புரை! இரா.சங்கர், கே.பழனியப்பன் பங்கேற்பு!

*நாகை, ஜன.14 -*

நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா தெரு முனை பிரச்சார கூட்டம் இலுப்பூர், எரவாஞ்சேரி ஊராட்சிகளில் நடைபெற்றது. தெருமுனை பிரச்சார கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன் தலைமை தாங்கினார்.

கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், ஒன்றிய அவைத்தலைவர் தங்க.மனோகரன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஏ.வேதநாயகம், மாவட்ட பிரதிநிதி ஆர்.நடராஜன், ஒன்றிய இளைஞர் அணி பொறுப்பாளர் ஜெ. முகம்மதுஅன்சாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இலுப்பூர் ஊராட்சியில் கிளை செயலாளர் ஜெயக்குமாரும், எரவாஞ்சேரி ஊராட்சியில் ஒன்றிய பொருளாளர் டி.பாரதிமோகனும் வரவேற்றனர். கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளரும், கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான இரா. சங்கர், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் ஆரூர்.மணிவண்ணன், குடியாத்தம் புவியரசி, இளம் பேச்சாளர் பா.அருண்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றி னார்கள்.

கூட்டத்தில் மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஜெ.அங்காடிசேகர், ஏ,ஜவகர்பாட்சா, ஜி.ஜிவானந்தம், கே.செந்தில் குமார், ஜி.எல்.அம்பிகாபதி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் கே.ரவிக்குமார், வெண்ணிலாபாபு, மாவட்ட பிரதிநிதிகள் சி.வீரமணி, சேக்முகமது, முன்னாள் ஊராட்சி மன்றதலைவர்கள் கலாவதி நடராஜன், அ.வைத்தியநாதன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் ஆர்.கே. கண்ணன், கே.மதியழகன், எஸ்.சிவக்குமார், முன்னாள் ஒன்றியக் குழு துணைத்தலைவர்கள் கே.கே.கண்ணன், எஸ்.புருஷோத்தமதாஸ், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கலைமணி, இலுப்பூர் கிளை நிர்வாகிகள் பி.ராஜேந்திரன், டி.சுப்பரமணியன், எஸ்.ராஜப்பா, டி.ராதா, சி.செல்வம், என். மனோகரன், டி.முருகாணந்தம், எம்.தமிழ்தாசன், கே.உத்திராபதி, எஸ்.துளசி, டி.முருகானந்தம், கே.லதா, கே. அபிராமசுந்தரி மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் இலுப்பூரில் கிளை செயலாளர் டி.அன்பழகன், எரவாஞ்சேரியில் ஏ.தமிழ்வாணன் ஆகியோர் நன்றி கூறினார்கள்.



இந்தியா கூட்டணியின் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோவின் புதுக்கோட்டை அலுவலகத் திறப்பு விழா மாவட்ட தி.மு.க. செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் எஸ்.கலியமூர்த்தி முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் புதுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, புதுக்கோட்டை மாநகர மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் எம்.லியாகத் அலி, கறைனா முகம்மது உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.